## November 8, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. கல்வி நிறுவன வளாகங்கள், மருத்துவமனைகள், பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள் உள்ளிட்ட அரசு மற்றும் பொது நிறுவன வளாகங்களில் சுற்றித் திரியும் தெரு நாய்கள் அனைத்தையும் பிடித்து காப்பகங்களில் விட வேண்டும் என உச்சநீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்தது.
    i. நாடு முழுவதும் தெருநாய்க் கடி சம்பவங்களும், அதனால் ஏற்படும் உயிரிழப்புகளும் அதிகரித்ததைத் தொடர்ந்து, இந்த விவகாரத்தை தானாக முன்வந்து உச்ச நீதிமன்றம் வழக்காக விசாரித்து வருகிறது.
    ii. முன்னதாக, இந்த வழக்கில் தெருக்களில் சுற்றித் திரியும் நாய்களைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் வழிகாட்டுதலை உச்சநீதி மன்றம் கடந்த ஆகஸ்ட் 22-ஆம் தேதி பிறப்பித்தது.
    iii. அதில், தெரு நாய்களுக்கு தெருக்களில் உணவளிக்கக் கூடாது. அதற்கென பிரத்யேக இடங்கள் உருவாக்கப்பட்டு, அங்கு மட்டுமே உணவளிக்க வேண்டும். இந்த உத்தரவை மீறி தெரு நாய்களுக்கு தெருக்களில் உணவளிப்பவர்கள் தண்டிக்கப்படுவர். தெரு நாய்களைப் பிடித்து கருத்தடை செய்த பிறகு மீண்டும் அதே இடங்களில் விடலாம் என்பன உள்ளிட்ட உத்தரவு மற்றும் வழிகாட்டுதலை உச்சநீதிமன்றம் வெளியிட்டது.
    iv. தேசிய நெடுஞ்சாலைகளில் சுற்றித்திரியும் கால்நடைகளை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும்' என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. கால்நடைகள் மற்றும் தெருநாய்கள் அடிக்கடி சுற்றித் திரியும் நெடுஞ்சாலைகளை அடையாளம் காண அதிகாரிகள் ஒருங்கிணைந்த ஆய்வை அவ்வப்போது மேற்கொண்டு, கால்நடைகள் உடனடியாக அப்புறப்படுத்தப்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட காப்பகங்களில் அடைக்கப்பட வேண்டும். அவ்வாறு காப்பகங்களில் அடைக்கப்படும் கால்நடைகளுக்கு தேவையான உணவு, குடிநீர் வசதி, மருத்துவ வசதிகளை விலங்குகள் வதைத் தடுப்புச் சட்டம் மற்றும் விலங்குகள் பிறப்பு கட்டுப்பாடு விதிகள் 2023 க்கு உட்பட்டு மேற்கொள்ள வேண்டும்.
2. இந்திய தேர்தல் ஆணையம் மேற்கொண்ட புதிய முயற்சிகளால் பிகார் பேரவைத் தேர்தலில் இதுவரை இல்லாத வகையில் 64.66 சதவீத வாக்குப் பதிவு நடந்துள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.
    i. பிகார் சட்டப்பேரவைத் தேர்தலின் முதல்கட்டம் ஒரு விழாக்கோல மனநிலையில் அமைதியாக நிறைவடைந்தது. பிகார் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு 64.66 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன. மாநிலத்தில் 18 மாவட்டங்களில் உள்ள 121 தொகுதிகளுக்கு 3.75 கோடிக்கும் அதிகமான வாக்காளர்களுடன் வாக்குப் பதிவு நடைபெற்றது.
    ii. பிகாரில் முதல்முறையாக, சர்வதேச தேர்தல் பார்வையாளர் திட்டத்தின் ஒருபகுதியாக தென்ஆப்பிரிக்கா, இந்தோனேசியா, தாய்லாந்து, பிலிப்பின்ஸ், பெல்ஜியம், கொலம்பியா ஆகிய 6 நாடுகளைச் சேர்ந்த 16 பிரதிநிதிகள் தேர்தல் நடவடிக்கைகளைப் பார்வையிட்டனர். அவர்கள் பிகார் தேர்தல் சர்வதேச அளவில் நடைபெற்ற நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட, வெளிப்படையான, திறமையான மற்றும் பங்கேற்பு தேர்தல் என்று பாராட்டினர்.
    iii. பிகாரின் 'பர்தா' நடைமுறையைப் பின்பற்றும் பெண்களை அடையாளம்காண அனைத்து வாக்குச்சாவடிகளிலும் ஒரு மத்திய ஆயுதக் காவல் படைபணியாளருடன் இணைந்து 90,000-க்கும் மேற்பட்ட பெண் தன்னார்வலர்கள் நிறுத்தப்பட்டனர்.

3. தனியார் நிறுவனங்கள் மூலம் பசுமையின் உற்பத்தி திட்டங்களைச் செயல்படுத்த மின்வாரியத்துக்கு, மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அனுமதி அளித்துள்ளது.

நாடு முழுவதும் புதுப்பிக்கத்தக்க பசுமை எரிசக்தி ஆற்றல் மூலம் மின்உற்பத்தி திட்டங்களைச் செயல்படுத்த அனைத்து மாநில அரசுகளையும் மத்திய அரசு அறிவுறுத்தி வருகிறது. இதைத் தொடர்ந்து பல்வேறு புதுப்பிக்கத்தக்க பசுமை எரிசக்தி ஆற்றல் திட்டங்களை மத்திய அரசின் நிதியுதவியுடன் மாநில அரசுகள் செயல்படுத்தி வருகின்றன.

i. தமிழக மின் வாரியம் சார்பில் பசுமை எரிசக்தி கழகம் என்ற தனி நிறுவனம் தொடங்கப்பட்டு, தனியார் பங்களிப்புடன் பசுமை எரிசக்தி உற்பத்தி திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. தமிழகத்தின் பல இடங்களில் காற்றாலை, சூரியசக்தி மின் நிலையங்கள் அமைக்க சாதகமான காலநிலை இருப்பதால், பல தனியார் நிறுவனங்கள் முதலீடு செய்ய ஆர்வம் காட்டி வருகின்றன. இந்தத் திட்டங்களுக்கு தமிழ் நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையமும் அனுமதி அளித்துள்ளது. இது குறித்து மின்வாரிய அதிகாரிகள் கூறியதாவது:

ii. புதுப்பிக்கத்தக்க பசுமை எரிசக்தி வாயிலாக மின்உற்பத்தி செய்யும் திட்டங்களை தமிழக அரசும், மின்சார வாரியமும் செயல்படுத்தி வருகின்றன. அதன்படி, திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி, கரூர் மாவட்டம், வெள்ளியணை ஆகிய இடங்களில் தலா 15 மெகாவாட் திறனில் சூரியசக்தி மின்நிலையங்கள் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை 3 மணி நேரத்துக்கு சேமித்து வைத்து, பயன்படுத்தும் வகையில், மின்கல ஆற்றல் சேமிப்பு கட்டமைப்பை உருவாக்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

iii. இதேபோல, தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு, மதுரை மாவட்டம், புளியங்குளம், கன்னியாகுமரி மாவட்டம், முப்பந்தல் ஆகிய இடங்களில் தலா 16 மெகாவாட் திறனில் சூரியசக்தி மின் உற்பத்திக்கான கட்டமைப்புகளை ஏற்படுத்தவும், தலா 18.75 மெகாவாட் திறனில் காற்றாலை மின் நிலையங்களை தனியார் நிறுவனம் மூலம் அமைக்கவும் அனுமதி அளித்துள்ளது.

iv. திருப்பூர் மாவட்டம், பல்லடம் துணை மின் நிலையத்தில் 25 மெகாவாட், புதுக்கோட்டையில் இரு இடங்களில் முறையே 25 மற்றும் 50 மெகாவாட், திருவாரூரில் 50 மெகாவாட், கோவை மாவட்டம், காரமடையில் 75 மெகாவாட், தேனி மாவட்டம், தப்புக்குண்டுவில் 50 மெகாவாட்பசுமை மின்சாரத்தை 4 மணி நேரத்துக்குச் சேமித்து மீண்டும் பயன்படுத்தும் வகையில், மின்கல ஆற்றல் சேமிப்புத்திட்டத்தைச் செயல்படுத்தவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்றனர்.

4. தனது கடற்படையில் மூன்றாவது விமானந் தாங்கிக் கப்பலான ஃபுஜியானை சீனா இணைத்துக்கொண்டது.

i. மின்காந்த முறையில் விமானம் செலுத்தும் அமைப்பைக் கொண்ட மிக நவீன போர்க்கப்பலான இது, ரகசியமாக நடத்தப்பட்ட விழாவில் கடற்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டது. இதில் சீன அதிபர் ஷி ஜின்பிங் கலந்துகொண்டார்.

ii. உலகில் ஃபுஜியான் தவிர அமெரிக்காவின் ஜெரால்ட் ஆர். ஃபோர்டு கப்பலில் மட்டுமே மின்காந்த விமானம் செலுத்தும் அமைப்பு உள்ளது குறிப்பிடத்தக்கது.

iii. தற்போது சீனாவின் மூன்று விமானந் தாங்கிக் கப்பல்களும் எரிபொருளால் வழக்கமான இயங்குகின்றன. ஆனால், டாலியானில் கட்டப்பட்டுவரும்

நான்காவது விமானந் தாங்கிக் கப்பல் அணு சக்தியில் இயங்கும் வகையில் உருவாக்கப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளது நினைவு கூரத்தக்கது.

5. சட்டவிரோத ஆட்சிக கவிழ்ப்பு வழக்கில் விசாரிக்கப் பட்டுவரும் பெருவின் முன்னாள் பிரதமர் பெட்ஸி சாவேஸூக்கு அடைக்கலம் அளிக்க மெக்ஸிகோ அரசு முடிவு செய்துள்ளதையடுத்து, அந்த நாட்டின் அதிபர் கிளாடியா ஷீன்பாமை விரும்பத்தகாத நபராக பெரு நாடாளு மன்றம் அறிவித்துள்ளது.
   i. கடந்த 2022-இல் அப்போதைய அதிபர் பெட்ரோ காஸ்டிலோ அவசரநிலை அறிவித்து, நாடாளுமன்றத்தைக் முயன்றார். தோல்வியில் முடிந்த இந்த முயற்சியில் சாவேஸூம் பங்கேற்றதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.
   ii. இதி தொடர்பாக நடைபெறும் வழக்கில் இருந்து அவரைப் பாதுகாக்கவே பெருவில் உள்ள தங்களின் தூதரகத்தில் சாவே ஸூக்கு மெக்ஸிகோ அடைக்கலம் அளித்துள்ளது.

6. நமது வீரர்களையும், விளையாட்டுகளையும் எல்லா விதத்திலுமாக மத்திய அரசு தொடர்ந்து ஆதரிக்கும் என்று மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா கூறினார்.
   i. இந்திய ஹாக்கியின் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் நிகழ்ச்சி, புது தில்லியில் உள்ள மேஜர் தியான்சந்த மைதானத்தில் நடைபெற்றது.
   ii. இந்திய விளையாட்டு ஆணையம், ஹாக்கி இந்தியா ஆகியவை இணைந்து நடத்தியது.

7. மகளிர் ஒரு நாள் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் அணிகளின் எண்ணிக்கையை
10-ஆக அதிகரிக்கவுள்ளதாக ஐசிசி அறிவித்தது. தற்போது வரை அந்தப்போட்டியில் 8 அணிகளே பங்கேற்று வருகின்றன.
   i. அண்மையில் நிறைவடைந்த 13-ஆவது மகளிர் கோப்பை கிரிக்கெட் போட்டியில், தென்னாப்பிரிக்காவை வீழ்த்தி இந்தியா உலகக் சாம்பியன் ஆனது. இந்தியாவில் நடைபெற்ற அந்தப் போட்டியைக்காண, மைதானத்தில் பல்லாயிரக்கணக்கில் ரசிகர்கள் திரண்டனர்.
   ii. அந்தப் போட்டிக்கு கிடைத்த வரவேற்பின் அடிப்படையில், மகளிர் உலகக் கோப்பை போட்டிக்கான அணிகளின் எண்ணிககையை அதிகரிக்க ஐசிசி முடிவு செய்துள்ளது.

8. இந்தியா நியூஸிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான 4-ஆவது சுற்றுப் பேச்சு வார்த்தை நிறைவடைந்தது.
   i. இந்த ஒப்பந்தத்தை விரைந்து இறுதி செய்யும் பணிகளை முன்னெடுக்க இருதரப்பும் ஒப்புக்கொண்டுள்ளன.
   ii. இந்தியா-நியூஸிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தை கடந்த மார்ச் 16-இல் முறைப்படி தொடங்கப்பட்டது. கடந்த செப்டம்பரில் 3-ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தை நிறைவு பெற்றது.
   iii. ஏற்றுமதி-இறக்குமதி என்ன?
      a) இந்தியாவில் இருந்து நியூஸிலாந்துக்கு துணி, ஜவுளி, மருந்துகள், சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோல், வேளாண் உபகரணங்கள் - இயந்திரங்கள், ஆட்டோ, இரும்பு-உருக்கு, காகிதப் பொருள்கள், மின்னணுப் பொருள்கள், இறால், வைரம், பாசுமதி அரிசி ஆகியவை முக்கியமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன.
      b) வேளாண் பொருள்கள், தாதுக்கள், ஆப்பிள், கிவி பழம், இறைச்சிப் பொருள்கள். லாக்டோஸ் மருந்து, நிலக்கரி, கம்பளி, மரக் கட்டைகள். கழிவு உலோகங்கள் உள்ளிட்டவை இறக்குமதி செய்யப்படுகின்றன.

9. தேஜஸ் இலகுரக போர் விமானங்களுக்கு 113 ஜெட் என்ஜின்களை கொள்முதல் செய்ய அமெரிக்காவின் 'ஜிஇ ஏரோஸ்பேஸ்' நிறுவனத்துடன் ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனம் (ஹெச்ஏஎல்) ஒப்பந்தம் செய்தது.
   i. இந்தியப் பொருள்களுக்கு 50 சதவீத இறக்குமதி வரியை அமெரிக்கா விதித்துள்ள சூழலில் இந்த ஒப்பந்தம் கையொப்பமானது. இந்திய விமானப் படைக்கு 97 தேஜஸ் எம்கே-1ஏ இலகுரக போர் விமானங்களை கொள்முதல் செய்ய ஹெச்ஏல் உடன் ரூ.62,370 கோடி மதிப்பிலான ஒப்பந்தத்தில் பாதுகாப்புத் துறை அமைச்சகம் கையொப்பமிட்டது.

10. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தாரக மந்திரமாக விளங்கிய வந்தே மாதரம் பாடல், கடந்த 1875 நவ. 7-இல் அக்ஷய நவமி நாளில் பங்கிம் சந்திர சாட்டர்ஜியால் இயற்றப் இயற்றப்பட்டதாகும் (பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான சன்யாசி புரட்சியின் பின்னணியில்). 'வங்க தரிசனம்' இலக்கிய இதழில், சாட்டர்ஜியின் ஆனந்தமடம்' நாவலின் ஒரு பகுதியாக இந்தப் பாடல் முதல் முறையாக வெளியானது.
   i. கடந்த 1896-இல் கொல்கத்தா காங்கிரஸ் மாநாட்டில் ரவீந்திரநாத் தாகூர் வந்தே மாதரம் பாடலை இசையமைத்துப் பாடினார். கடந்த 1950, ஜனவரி 24- இல் அரசியல் நிர்ணய சபையால் நாட்டின் தேசியப் பாடலாக முறைப்படி ஏற்கப்பட்டது.
   ii. முன்னதாக, கடந்த 1937-இல் மௌலானா அபுல்கலாம் ஆசாத், ஜவாஹர்லால் நேரு, சுபாஷ் சந்திர போஸ், ஆச்சார்ய நரேந்திர தேவா, ரவீந்திரநாத் தாகூர் ஆகியோர் கொண்ட குழுவின் பரிந்துரையின்பேரில், வந்தேமாத ரம்பாடலின் 6 பத்திகளில் முதல் 2 பத்திகளை மட்டும் தேசியப் பாடலாக காங்கிரஸ் தேர்வு செய்தது.
   iii. இந்நிலையில், வந்தே மாதரம் இயற்றப்பட்டதன் 150-ஆவது ஆண்டுக் கொண்டாட்டங்களின் தொடக்க நிகழ்ச்சி, தில்லியில் உள்ள இந்திரா காந்தி உள்விளையாட்டரங்கில் நடைபெற்றது.

11. இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் பங்கேற்கும் க்வாட் அமைப்பின் தலைவர்கள் மாநாடு தில்லியில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ளது. இதில் டிரம்ப் பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், இந்த மாநாட்டுக்கான தேதியை இந்தியா இது வரை இறுதி செய்யவில்லை.
   i. இந்தியா மீது பதிலடி வரி 25 சதவீதம், ரஷியாவிடம் கச்சா எண்ணெய் வாங்குவதற்காக 25 சதவீதம் என மொத்தம் 50 சதவீத வரியை டிரம்ப் விதித்தார். இது இந்திய-அமெரிக்க வர்த்தக உறவை வெகுவாகப் பாதித்துள்ளது.
   ii. இது தவிர பாகிஸ்தான் பயங்கரவாதிகளுக்கு எதிரான இந்தியாவின் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்குப் பிறகு இந்தியா-பாகிஸ்தான் இடையே போர் ஏற்படாமல் நான் தலையிட்டு தடுத்தேன் என்று டிரம்ப் தொடர்ந்து கூறி வருகிறார். ஆனால், இந்தியா இதை ஏற்கவில்லை.
   iii. மேலும், வர்த்தகப் பேச்சு விஷயத்தில் அமெரிக்காவின் மக்காச் சோளம், பால் பொருள்களை இந்தியாவில் அனுமதிக்க வேண்டுமென்று அமெரிக்கா வலியுறுத்துகிறது. ஆனால், உள்நாட்டு விவசாயிகள் நலன் கருதி இதை ஏற்க இந்தியா மறுத்து வருகிறது. இதனால் பேச்சுவார்த்தையில் தொடர்ந்து இழுபறி நீடிக்கிறது.